## மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| | | |
|---|---|---|
| O.S. No. 227/2014 | Date : 03.04.2024 | DW5 |
| Name: சம்பூர்ணம் | S/o. **ஜோதிலிங்கம்** | |
| Evidence Recorded Time: 3.15 P.M. to 4.35 P.M | | |

**1 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :-**

மேற்படி வழக்கில் 1ம் பிரதிவாதி ராமநாதன்பிள்ளை எனக்கு என்ன உறவு முறை என்றால் என் கணவரின் தம்பி ஆவார்.2ம் வாதி லட்சுமி என்கிற லட்சுமியம்மாள் என் மாமனாரின் இரண்டாவது மனைவி ஆவார். என் கணவருக்கு சித்தி. அம்சவேணி என் கணவருக்கு தங்கை ஆவார். லட்சுமியம்மாளின் மகள் ஆவார். அருணோதயம் லட்சமியம்மாளின் மகன் ஆவார். தாவா சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டது என்ற என் பதிலுரையில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆதியில் நாரயணபிள்ளை மகன் துரைசாமிபிள்ளைக்கு பாத்தியப்பட்டது. அவர் என் கணவரின் அம்மாவின் தகப்பனார் ஆவார். தாவா சொத்து துரைசாமிபிள்ளைக்கு எப்படி பாத்தியப்பட்டது என்றால் பிதுராஜ்ஜிதமாய் பாத்தியப்பட்டது. நான் முழுசொத்தும் பூர்வீக சொத்து என்று சொல்லியுள்ளது தவறு என்றும் அந்த சொத்துக்களில் சில சொத்துக்கள் துரைசாமிபிள்ளை சுயராஜ்ஜியமாய் கிரையம் வாங்கிய சொத்து என்ற சொன்னால் சரிதான். துரைசாமி பிள்ளை எப்போது இறந்தார் என்றால் தேதி நினைவில்லை. துரைசாமி பிள்ளை இறக்கும் போது அவருடைய சட்டப்படியான வாரிசுகள் யார் யார் என்றால் மொத்தம் 7 வாரிசுகள் ஆவார்கள். துரைசாமிபிள்ளை உயில் எழுதி வைத்தது எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அது எந்த தேதியில் எழுதப்பட்டது என்றோ அல்லது அந்த உயிலை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். 11ம் வாதி அமிர்தலிங்கத்தின் தந்தை நடராஜன் எப்போது இறந்தார் என்றால் தேதி நினைவில்லை. மேற்படி வழக்கில் வாதி தரப்பில் என்ன என்ன ச.எண்கள் சொல்லப்பட்டுள்ளது என்றால் ச.எண்.240/1ஏ, 240/1பி, 240/1சி, 240/1டி, 235/1 ஆகிய ச.எண்கள் சொல்லப்பட்டுள்ளது. எவ்வளவு விஸ்தீரணத்திற்கு வழக்கு போட்டுள்ளார்கள் என்றால் 6 ஏக்கர் 96 செண்ட். எந்த எந்த பிரதிவாதிகள் மேற்படி வழக்கில் பதில் தாக்கல் செய்துள்ளார்கள் என்பது தெரியுமா என்றால் தெரியும். நடராஜன் பவர் பத்திரம் ஏற்படுத்திய விவரம் எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி தெரியாது. தாவா சொத்து யாருடைய அனுபவத்தில் உள்ளது என்றால் என் அனுபவத்தில் உள்ளது. நான், ராமநாதன் பிள்ளை, லட்சுமியம்மாள் வகையறா ஆகியோர் அனைவரும் அனுபவத்தில் உள்ளோம். வழக்கு சொத்து எந்த இடத்தில் உள்ளது என்றால் குட்டப்பட்டி கிராமம், மாதநாயக்கன் பட்டியில் உள்ளது. மேற்படி சொத்தின் கதவு எண். என்ன என்றால் கதவு எண் நினைவில்லை. நான் என்ன வேலை பார்த்து பணி ஒய்வு பெற்றேன் என்றால் நான் உதவி ஆட்சியராக பணியாற்றி ஓய்வு பெற்றேன். இறுதியாக கரூர் மாவட்டத்தில் பணியாற்றினேன். மேற்படி மாவட்டத்தில் எந்த ஆண்டிலிருந்து எந்த ஆண்டு வரை இருந்தேன் என்றால் 2009 -2011 வரை, 1995ல் பணியில் சேர்ந்தேன். சென்னையில் பணியில் சேர்ந்தேன். சென்னையில் பணியில் சேர்ந்த காலம் முதல் எங்கு குடியிருந்தேன்

என்றால் பணிபுரிந்தஇடத்தில் குடியிருந்தேன். எந்த விலாசத்திற்கு சம்மன் வந்தது என்றால் நாமகிரிபேட்டை விலாசத்திற்கு சம்மன் வந்தது. இப்போது வரை நான் நாமகிரிபேட்டையில் குடியிருந்து வருகிறேன் என்றால் அவ்வப்போது சொத்து இருக்கும் இடத்திற்கு வருவேன். எப்போதெல்லாம் வந்து போவேன் என்று சொல்ல முடியாது என்றால் பல முறை வந்துள்ளேன். என் முதல் விசாரணையிலோ அல்லது பதிலுரையிலே நான் அவ்வப்போது வந்து போனேன் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்து இருக்கும் இடத்திற்கு நான் அவ்வப்பபோது வந்து போவேன் என்று நான் சொல்வது பொய் என்றும் இந்த வழக்கிற்காக தற்போது நான் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி வழக்கை யார் தாக்கல் செய்தார்கள் என்றால் லட்சுமியம்மாள், பருவதம்மாள், ஜானகி அம்மாள் மகன் அமிர்தலிங்கம், பாக்கியம்மாள், விமலாம்மாள் ஆகியோர் தாக்கல் செய்தார்கள். மொத்தம் 5 வாதிகள் தான் நடத்தி வருகிறார்கள். வழக்குரையை நான் படித்து பார்த்தேன் அந்த 5 நபர்கள் தான் உள்ளார்களா என்றால் ராமநாதன் அதில் இருந்தார் தற்போது அவர் பிரதிவாதியாக வந்துவிட்டார். வழக்கு என்ன பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் பாகப்பிரிவினை கேட்டு தாக்கல் செய்துள்ளார். எத்தனை பாகம் என்று தெரிந்து கொண்டேனா என்றால் மொத்தம் 7 பாகமாக பிரிக்க கேட்டுள்ளார்கள். மேற்படி வழக்கில் சம்பூர்ணம் ஆகிய நான், எனது மகள் சூர்யஜோதி, எனது மைத்துனர் ராமநாதன் பிள்ளை, ஆகியோர்கள் பிரதிவாதிகள் ஆவார்கள். துரைசாமி பிள்ளை என் கணவரின் அம்மாவின் தகப்பனார் ஆவார். நான் சொன்ன 3 பேரை தவிர வேறு யார் பிரதிவாதிகள் என்றால் குமரேசன் மனைவி சம்பூர்ணவள்ளி மற்றும் அவர்களுடைய பிள்ளைகள் அவர்களுடைய பெயர் எனக்கு தெரியாது. அவர்களையும் பிரதிவாதிகளாக சேர்த்து தான் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். வழக்கு சொத்து எவ்வளவு விஸ்தீரணம் என்று தெரியுமா என்றால் 6 ஏக்கர் 96 செண்ட என்று வழக்கில் காட்டப்பட்டுள்ளது. அதன் ச.எண். தெரியுமா என்றால் தெரியும். ஒவ்வொரு ச.எண்ணிலும் எவ்வளவு விஸ்தீரணம் வழக்கில் சொல்லியுள்ளது தெரியுமா என்றால் தெரியும்.ச.எண்.240/1ஏ 0.38.5 ஹெக்டேர். ச.எண்.240/1பில் 0.38.5 ஹெக்டேர். 240/1சில் 0.05.5 ஹெக்டேர். 240/1டிக்கு விஸ்தீரணம் தற்போது நினைவில்லை. 235/1ல் 0.11.5 ஹெக்டேர். 240/1டிக்கு நான்கு பக்கம் யாருடைய சொத்து உள்ளது தெரியுமா என்றால் தெரியும். கிழக்கு பக்கம் லட்சுமி வகையறா நிலம் உள்ளது. மேற்கு பக்கம் தாரமங்கலம் –மேட்டூர் மெயின் ரோடு, தெற்கு பக்கம் பட்டா நிலம் அவரின் பெயர் தெரியவில்லை, வடக்கு பக்கம் தாரமங்கலம் –மேட்டூர் மெயின் ரோடு. 240/1ஏன் 4 பக்கம் கிழக்கு பக்கம் லட்சுமி வகையறாவுக்கு பாத்தியப்பட்ட கிணறு வாரி, மேற்கு பக்கம் தாரமங்கலம் மெயின் ரோடு, தெற்கு பக்கம் மெயின் ரோடு, வடக்கு பக்கம் குமரேசன் மனைவி சம்பூர்ணவள்ளி நிலம். 240/1பின் 4 பக்கம் யாருடைய நிலம் உள்ளது என்றால் கிழக்கு பக்கம் லட்சுமி வகையறாவிற்கு பாத்தியப்பட்ட 240/1டி நிலம், தெற்கு பக்கம் 240/1ஏ ஜோதிலிங்கம் மனைவி சம்பூர்ணம் மகள் சூர்யஜோதி ,ஜோதிலிங்கம் சகோதரர் ராமநாதன் பிள்ளை ஆகியோர் நிலம், மேற்கு பக்கம் தாரமங்கலம்–மேட்டூர் மெயின் ரோடு, வடக்கு பட்டாதாரர் நிலம். அவர் பெயர் நினைவில்லை. 240/1சின் கிணறு வாரி சேர்ந்தது. அது எத்தனை செண்ட் என்றால் 13 செண்ட். மற்ற சொத்திற்கு நடுப்பகுதியில் கிணறு அமைந்துள்ளது. 235/1 4 பக்க செக்குபந்தி நினைவில்லை. நான் செக்குபந்தியில் பெயர்கள் குறிப்பிட்டு சொன்ன நபர்கள் இந்த வழக்கில் சம்மந்தப்பட்ட தரப்பினர் என்றால் சரிதான். வழக்கு சொத்துக்கள் ஏற்கனவே பிரிந்து

விட்டதாகத்தான் சொல்லியுள்ளேன். ஏற்கனவே பாகம் பிரிக்கப்பட்டதா அல்லது பிரிக்கவில்லை என்று வழக்காடுகிறேனா என்றால் பாகம் பிரிந்துவிட்டது என்றும் அந்த சொத்தை எங்களுக்கே கொடுக்க வேண்டும் என்று கேட்டுள்ளேன். இந்த வழக்கு தொடர்புடைய முந்தைய வழக்குகள் பற்றி எனக்கு தெரியுமா என்றால் நேரடியாக தெரியாது. தீர்ப்பு நகலை பார்த்தால் தான் தெரியும். இந்த வழக்கில் 2ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு, 1, 3,5 பிரதிவாதிகளால் ஏற்கப்பட்ட பதிலுரையை நான் பார்த்தேனா என்றால் படித்து பார்க்கவில்லை. இந்த வழக்கில் 1,2,3,5 பிரதிவாதிகள் என்ன வழக்காடி வருகிறார்கள் என்று தெரியாமலேயே முதல் விசாரணை சாட்சிய வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தெரிந்து தான் தாக்கல் செய்துள்ளேன். பாகம் பிரிக்கப்பட்டதாக நான் சொல்வது எந்த தேதியில் என்றால் தாலுக்கா 8 ஏ /5/1992 பசலி. வட்டாட்சியரால் உட்பிரிவு செய்யப்பட்டு பிரிக்கப்பட்டது. மேற்படி பாகம் பிரிக்க எந்த ஆவணங்கள் கொடுக்கப்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வட்டாட்சியருக்கு பாகம் பிரிக்காமல் உட்பிரிவு செய்ய அதிகாரம் இல்லை என்பது எனக்கு தெரியுமா என்றால் அதிகாரம் உள்ளது. வட்டாட்சியருக்கு பொது சொத்தை பாகம் பிரித்து தரும் அதிகாரம் இது வரை கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. நான் மேற்சொன்ன தேதியில் எந்த பாகமும் ஆகவில்லை என்றாலும் என் அதிகாரத்தை பயன்படுத்தி வருவாய் துறை அலுவலகத்தில் நான் பணிபுரிந்த காலத்தில் என் அதிகாரத்தை பயன்படுத்தி போலியான ஆவணங்களை தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. துரைசாமி பிள்ளை உயிரோடு இருந்தபோது 02.11.1955ல் ஒரு உயில் எழுதி வைத்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மேற்படி உயிலில் உள்ள விவரங்களை நான் படித்து தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். அந்த உயிலுக்கு பின்னிட்டு வேறு எந்த உயிலும் அவர் எழுதாமல் இறந்து போனது எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அவர் எந்த தேதியில் இறந்தார் என்றால் தேதி நினைவில்லை. வழக்கில் வாதிகள் மேற்படிஉயில் அமலுக்கு வந்துவிட்டது என்று சொல்லியுள்ளது எனக்கு தெரியுமா என்றால் உயில் அமலுக்கு வந்துவிட்டது. வாதிகள் வழக்கில் உயில் அமலுக்கு வந்துவிட்டது என்று சொல்லியுள்ளார்கள். மேட்டூர் உரிமையில் நீதிமன்றத்தில் அ.வ.எண்.754/1987 என்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டு முழு விசாரணைக்கு பின்னிட்டு கடந்த 25.02.1994ல் தீர்ப்பளிக்கப்பட்டது தெரியுமா என்றால் தெரியும். என் கணவர் சொல்லி தெரியும். அந்த தீர்ப்பை எதிர்த்து யாரும் எந்த விதமான மேல் முறையிடும் செய்யவில்லை என்றால் சரிதான். நான் படித்து பார்த்தாக சொன்ன உயிலில் வழக்கு சொத்துக்களை குத்தகைக்கு விட்டு அதன் வருமானத்தை பெண்மக்கள் அனுபவித்து வரவேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.வ.எண்.111/2010 என்ற வழக்கை குமரேசன் என்பவர் தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அதில் 13.10.2014ல் தீர்ப்பு வழங்கப்பட்டது என்றால் சரிதான். அந்த தீர்ப்பில் ஒரு பகுதி அனுமதிக்கப்பட்டு ஒரு பகுதி தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். அதனால் மேல்முறையிட்டு எண்.8/14 என்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டு அது அனுமதிக்கப்பட்டது என்றால் சரிதான். பாகம் பிரிக்கப்பட்டதாக நான் கூறும் விவரத்தை முதன் முதலில் இந்த வழக்கில் தான் சொல்லப்படுகிறது என்றால் சரிதான். குமரேசன் என்பவர் வருவாய் நீதிமன்றத்திற்கு சென்று மேற்படி சொத்துக்களுக்கு குத்தகைதாரர் என்று பதிவு செய்துள்ளார் என்றால் அது போலியாக தயாரிக்கப்பட்டது. அது எந்த ஆண்டு என்றால் ஆண்டு நினைவில்லை. அதை எதிர்த்து நானோ அல்லது மற்ற

பிரதிவாதிகளோ எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் நான் மேட்டூர் கோட்டாட்சியரிடம் 2019–ல் மனு கொடுத்தேன். 2019 லேயே கோட்டாட்சியர் உத்தரவு பிறப்பித்தார். குத்தகை பத்திரம் எதுவும் இல்லாமல் குத்தகை பதிவு செய்தது தவறு என்று சென்னை உயர் நீதிமன்ற வழிகாட்டுதலின் பேரில் உத்தரவு பிறப்பித்தார். அதன் எண் நினைவில்லை. சென்னை உயர் நீதிமன்றத்தில் நான் என்ன வகையான மனு தாக்கல் செய்தேன் என்றால் நீதிபேராணை தாக்கல் செய்தேன். மனு எண் நினைவில்லை. மேற்படி சங்கதிகள் பற்றி என் பதிலுரையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். கோட்டாட்சியரிடம் நான் கொடுத்த மனுவில் யார் யார் தரப்பினர்கள் என்றால் குமரேசன் பெயரில் மட்டும் தான் கொடுத்தேன். மேற்படி ஆர்டிஓ எந்த தேதியில் உத்தரவு பிறப்பித்தார் என்றால் தேதி நினைவில்லை. குமரேசனை விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். நான் சொல்வது பொய் என்றும், குத்தகைதாரராக வெகு காலத்திற்கு முன்பே முறையான நீதிமன்றத்தில, முறையாக விசாரித்து பிறப்பிக்கப்பட்ட உத்தரவில் சம்மந்தப்பட்ட தரப்பினர்களை கட்சி சேர்க்காமல் அவர்களுக்கு முறையாக அறிவிப்பு அனுப்பி விசாரிக்காமல் நான் சொல்வது போல் ஏதாவது உத்தரவு பெறப்பட்டிருந்தால் அது சட்டப்படி செல்லாது என்றும் அதனால் தான் மேற்படி சங்கதிகளை என் பதிலுரையில் நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. குமரேசனை குத்தகைதாராக பதிவு செய்தது யார் என்றால் மேட்டூர் வட்டாட்சியர் . எந்த தேதி என்றால் தேதி நினைவில்லை. வருவாய் நீதிமன்றத்தில் ஆர்டிஓ நிலையில் உள்ளவர்கள் தான் மேற்படி குத்தகை சம்மந்தப்பட்ட விசாரணையில் உத்தரவு பிறப்பிக்க அதிகாரம் படைத்தவர்கள் என்றால் சரிதான். அனால் குமரேசனை பொறுத்தவரை வட்டாட்சியர் தான் உத்தரவு பிறப்பித்தார். நான் சொல்வது தவறு என்றும் திருச்சி வருவாய் நீதிமன்றத்தில் தான் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றும் அதே நிலையில் உள்ளவர்கள் அதை ரத்து செய்ய அதிகாரம் படைத்தவர்கள் என்றால் சரியல்ல. மேற்படி நான் சொன்னது அனைத்தும் என் அதிகாரத்தினை துஷ்பிரயோகம் செய்து ஏற்படுத்தியது என்றால் தவறாகும்.துரைசாமிபிள்ளையின் பெண்மக்களில் யார் யாரெல்லாம் உயிரோடு உள்ளார்கள் என்றால் லட்சமியம்மாள், பருவதம்மாள், பாக்கியம்மாள், சம்பூர்ணவள்ளி, விமலாம்மாள் ஆகியோர் உள்ளார்கள்.மேற்படி பெண் மக்கள் உயிரோடு உள்ளவரை பாகம் பிரிக்கமுடியாது என்று துரைசாமி மூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. உயில் அமலுக்கு வந்ததாக ஒப்புக்கொள்ளும் நிலையில் அதில் கண்ட சரத்துகளை மறுக்க சட்டப்படி நான் தடைசெய்யப்படுகிறேன் என்றால் சரியல்ல. இதுவரை பாகம் ஆனதாக எந்த வழக்கு நடவடிக்கைகளிலும் என் கணவரே சொல்லாத நிலையில் தற்போது இந்த வழக்கிற்கு பின்னிட்டு வருவாய் துறை ஆவணங்களை போலியாக உருவாக்கி பாகம் ஆகிவிடடது என்று சொல்வது தவறு என்றால் சரியல்ல. ஜோதிலிங்கம், ராமநாதன் பிள்ளை பெயரில் வழங்கப்பட்ட பட்டா எந்த தேதியில் வழங்கப்பட்டது என்றால் 13.10.1982 ல் வழங்கப்பட்டது. வழக்கு நடவடிக்கைகளில் 1987 லிருந்து என் கணவரம் அவரை தொடர்ந்து நாங்களும் ராமநாதன் பிள்ளையும் வழக்கை நடத்தி வருகிறோம் என்றால் சரிதான். இந்த பாக வழக்கில் ராமநாதன் பிள்ளை முதல் வாதியாக இருந்தார் என்றால் சரிதான். யார் யாருக்கு எந்த எந்த சொத்தில் எவ்வளவு நிலம் ஒதுக்கப்பட்டது என்றால் ச.எண் சொல்ல முடியும். விஸ்தீரணம் சொல்ல முடியாது. ச.எண்.240 ஐ 240/1 ஏ, 240/1 பி, 240/1 சி, 240/1 டி ஆக பிரித்து 235/1 முழுதாக

வைத்துள்ளார்கள். 4 பாகங்களாக பிரிக்கப்பட்டது. மேற்படி 4 பாகங்கள் 8 பேருக்கு பிரிக்கப்பட்டது. 235/1 , 240/1 சி 8 பேருக்கும் கூட்டாக வருகிறது. துரைசாமிபிள்ளைக்கு 7 வாரிசுகள் என்றும் 8 ஆக பிரிக்கப்பட்டதாக நான் சொல்வது பொய் என்றும் அதனால் தான் யார் யாருக்கு என்ன பாகம் பிரிக்கப்பட்டது என்று எதுவும் தெரியாமல் பாகப் பிரிவினை ஆகவில்லை என்று நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி பாகப்பிரிவினை காலத்தில் எனக்கு திருமணம் ஆகவில்லை என்றால் சரிதான். பாகப் பிரிவினை பற்றி நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.(வழக்கறிஞர் வேண்டுகோளின் படி குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)

<u>மறுவிசாரணை – இல்லை.</u>

ஒம்/–DW5

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–எஸ்.முத்துராமன்
சார்பு நீதிபதி, மேட்டுர்.